முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 93/2022

நாள். 23.09.2025 பி.வா.சா.1 – திரு.அஸ்வின்குமார்

த/பெ - திரு.சுயம்பு ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்துள்ள ராம பாண்டி உங்களது சித்தப்பா என்றால் சரி தான். இந்த வழக்கு தபசில் சொத்து சர்வே எண். 1284/1 சி, 1284/1 டி மற்றும் 1284/2 எ 1284/2 பி ஆகிய 4 சர்வே எண்களையும் சேர்த்து 1 ஏக்கர் 32 செண்டை 2 ம் பிரதிவாதி பாஸ்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான். சர்வே எண். 1284/2 எ தெற்கடைய 10 செண்டு நிலம் சுவாமி தாஸ் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான்.

2) சுவாமி தாஸ் என்பவர் உங்களுடைய சித்தி சுபாலெட்சுமி என்பவருக்கு 2012 ம் ஆண்டு மேற்படி 10 செண்டு இடத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். சர்வே எண். 1284/2 எ தெற்கடைய 10 செண்டு நிலம் உள்ளது என்றால் சரி தான். அந்த 10 செண்டு நிலத்திற்கு கிழக்கடைய 3 மீட்டர் அகல பாதை கிழமேல் ரோட்டிலிருந்து கிழக்கு ஓரமாக செல்கிறது என்றால் ஞாபகம் இல்லை. 2 ம் பிரதிவாதி பாஸ்கர் 2017 ல் வாதி ஆகிய உங்கள் சித்தப்பாவிற்கு மேற்படி 4 சர்வே எண்களிலும் தெற்கடைய 82 செண்டு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். மீதமுள்ள

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.23 14:25:52 +0530

வடக்கடைய 50 செண்டு நிலத்தை உங்களுக்கு 2ம் பிரதிவாதி 2021ம் ஆண்டு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான்.

3) உங்கள் 50 செண்டு இடத்திற்கு வடக்கு பக்கம் தான் கிழமேல் ரோடு என்றால் சரி தான். வாதிக்கு பாத்தியப்பட்ட 82 செண்டு நிலத்திற்கு செல்வதற்கு 2ம் பிரதிவாதி பாஸ்கர் எந்த விதமான பாதையும் ஒதுக்கி கொடுக்கவில்லை என்றால் சரி தான். சாட்சியானவர் தானாக முன் வந்து வாதியின் மனைவி சுபாலெட்சுமிக்கு பாத்தியப்பட்ட 10 செண்டுக்கு செல்லக்கூடிய பாதையை வாதி உபயோகித்து வருவதாக சாட்சி கூறுகிறார்.

4) சர்வே எண். 1284/1 சி - ல் 29 செண்டும், சர்வே எண். 1284/2 எ – ல் 21 செண்டும் ஆக 50 செண்டை நீங்கள் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரி தான். நீங்கள் கிரையம் பெற்ற பிறகு தான் சர்வே எண். 1284/2 எ 2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரி தான். அவ்வாறு உட்பிரிவு செய்யும் போது வாதிக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரி தான். சர்வே எண். 1284/2 சி - யை பொறுத்த வரை தனிப்பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரி தான்.

5) சர்வே எண். 1284/2 எ -ல் வட மேற்கடைய ஒரு இசக்கி அம்மன் கோவில் உள்ளது என்றால் சரி தான். அந்த கோவிலை அம்மச்சி கோவில் ஊரை சார்ந்த பொது மக்கள்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.23 14:26:02 +0530

பயன்பாடு செய்து வருகிறார்கள் என்றால் சரி தான். அந்த கோவில் 5 செண்டு இருக்குமா என்றால் 1 1/2 செண்டு உள்ளது. மேற்படி கோவிலுக்கு என்று சொல்லி எந்த தனிப்பட்டாவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரி தான். பி.வா.சா-ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண். 3471 ல் சர்வே எண். 1284/2 எ 2 ல் அமைந்துள்ளது என்றால் சரி தான். அந்த 10 செண்டுக்குள்ள பாதை கோவிலுக்கு கிழக்கடைய முன்னால் செல்கிறது என்றால் சரி தான்.

6) 2ம் பிரதிவாதி வாதிக்கு உங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 50 செண்டு நிலத்தை வாதிக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்பந்தம் போட்ட விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி வாதிக்கு விற்பனை செய்த தபசில் சொத்தில் புலங்குவதற்கு உங்களுக்கு விற்பனை செய்த 50 செண்டு வழியாக பாதை உரிமை உண்டு என்றால் சரியல்ல. சர்வே எண். 1284/1 சி மற்றும் 1284/1 டி - க்கு செல்வதற்கு வேறு தனியாக பாதை எதுவும் கிடையாது என்றால் சரி தான். சர்வே எண். 1284/1 சி மற்றும் 1284/1 டி - க்கு செல்வதற்கு சர்வே எண். 1284/2 எ வழியாகத் தான் போக முடியும் என்றால் சரியல்ல.

7) உங்களுக்கு விற்பனை செய்த பாஸ்கரன் என்பவரின் கிரைய பத்திரத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். அந்த வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ம் பிரதிவாதியானவர் கிரையம் பெறும் போது சர்வே எண். 1284/1 எ தபசிலை பொறுத்த

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.23 14:26:09 +0530

வரை சுவாமி தாசுக்கு 10 செண்டு நிலம் நீங்கலாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி தான். வா.சா.ஆ.2 ஆவணத்திலேயே கிழக்கு பக்க எல்கையாக 6 அடி அளவுள்ள தென் வடல் பாதையும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த 6 அடி பாதை தான் வாதியின் மனைவி சுபாலெட்சுமியின் 10 செண்டு நிலத்திற்கு செல்லக் கூடிய பிரதான பாதை என்றால் சரி தான்.

8) வாதிக்கும், உங்கள் குடும்பத்திற்கும் இடையே கடந்த சில வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரி தான். உங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 50 செண்டு இடத்தை 2ம் பிரதிவாதியிடம் இருந்து வாதி கிரையம் பெறுவதற்கு கேட்டதற்கு 2ம் பிரதிவாதி மறுத்து விட்டு உங்களுக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. சர்வே எண். 1284/1 சி-ல் ஒரு EB கனெக்சன் உள்ளது என்றால் சரி தான். அந்த EB கனெக்சனை வாதி தான் தற்போதும் உபயோகித்து வருகிறார் என்றால் சரி தான். நான் உபயோகம் செய்யக் கூடாது என்று கூறிய பிறகும் வாதி உபயோகித்து வருகிறார்.

9) வாதியானவர் அங்கு செங்கல் சூளை நடத்தி வருகிறார் என்றால் சரி தான். அந்த செங்கல் சூளைக்கு தான் மின்சாரத்தை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரி தான். வழக்கு தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் EB கனெக்சன் அவருடைய அனுபவத்தில் உள்ளது என்றும் வாதி கோரியது போல் வாதிக்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.23 14:26:16 +0530

ஆதரவாக தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உங்களுக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 பட்டா சட்ட விரோதமாக வாதிக்கு எந்த வித அறிவிப்பும் கொடுக்காமல் பெற்றுள்ளதால் அந்த ஆவணம் செல்லத்தக்க ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.23 14:26:22 +0530